

முதலமைச்சர் , கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டப்பேரவைத் தேர்தல் 2026 தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர், 1.2.2026 – ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களிடம் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அமைச்சர் சி.வெ.கணேசன், கழக செய்தி தொடர்புக்குழு தலைவர் முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக அயலக அணி செயலாளர் முன்னாள் எம்.பி எம்.எம்.அப்துல்லா,கழக செய்தி தொடர்பு குழு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மருத்துவர் அணி செயலாளர் எம்.எல்.ஏ மருத்துவர் எழிலன் நாகநாதன் , கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக மகளிர்தொண்டர் அணி இணை செயலாளர் எம்.எல்.ஏ தமிழரசி ரவிக்குமார், சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகியார் அடங்கிய குழுவினர் வருகை தந்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கைகான பரிந்துரைகளை கேட்டனர். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், உதயசூரியன், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் நகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணியாக சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா. கற்பகம், மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், எம்.அப்துல் சலாம், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், நகர செயலாளர் ஆர்.கோபிகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், பேரூராட்சி செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் உள்ள

# விசைத்தறி யூனிட்டுகளுக்கு போதிய நிதி ஆதரவை ஒன்றிய அரசு வழங்கியுள்ளதா?

## மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடல்லி, பிப்.5 – தமிழ்நாட்டில் உள்ள விசைத் தறி யூனிட்களுக்கு போதிய நிதி ஆதரவை ஒன்றிய அரசு வழங்கி யுள்ளதா? என மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பி னார்.

நாட்டிலேயே இரண்டாவது பெரிய விசைத்த றித் துறையான தமிழகத்தில் உள்ள 90000 விசைத்தறி யூனிட்களுக்கு அரசு போதிய நிதி மற்றும் ஆதரவை வழங்கியுள்ளதா? அது குறித்த விவரங்கள் தருக?

பவர்டெக்ஸ் இந்தியா திட்டம் மற்றும் டெக்ஸ்டைல் கிளஸ்டர் டெவலப்மென்ட் திட்டத்தின் (TCDS) கீழ் தமிழ்நாட்டில் உள்ள விசைத் தறி துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி விவரங்கள் மற்றும் தமிழ்நாட் டில் உள்ள விசைத்தறி துறைக்கு வழங்கப்படும் ஆதரவு மற்றும் திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்ப டுத்தல் நிதி திட்டம் (ATUFS), குரூப் ஓர்க்ஷெட் திட்டம், PM பவர்லோம் சிட்யூம்ஸ் மேம்பாடு திட்டம் திட்டம் மற்றும் விரிவான விசைத்தறி கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (CP CDS)?

பதில் : ஒன்றிய அரசின் ஜவு ளித்துறை அமைச்சர் பபித்ரா மார் கெரிதா எழுத்து பூர்வமாக கூறிய பதில் விவரம் கீழ்வருமாறு:

தமிழ்நாடு உட்பட நாடு முழுவ தும் உள்ள விசைத்தறித் துறைக்கு



இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம் நிதி உதவி மற்றும் நிறுவன ஆதரவை வழங்கி வருகிறது. ஜவுளி அமைச்சகம் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள விசைத் தறி அலகுகளின் வளர்ச்சி, நவீனம யமாக்கல் மற்றும் நிலைத்த ன்மைக்காக பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவை

1. திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்படுத்தல் நிதித் திட்டம் (ATUFS).
2. பவர்டெக்ஸ் இந்தியா திட்டம்.
3. விரிவான விசைத்தறி கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (CPCDS).
4. டெக்ஸ்டைல் கிளஸ்டர் டெவலப்மென்ட் ஸ்கீம் (டிசிடிஎஸ்).
5. ஐடிஏடி மையங்கள் மூலம் பயிற்சி, வடிவமைப்பு மற்றும் மேம்பாடு ஆதரவு திட்டம்
6. விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த குழு காப்பீட்டுத் திட்டம்.

தமிழ்நாட்டின் விசைத்தறித் தொழில் உட்பட ஜவுளித் தொழிலுக்கு வழங்கப்படும் நிதியுதவி (திட்ட வாரியாக) விவரம் கீழ்வருமாறு:

A.பவர்டெக்ஸ் இந்தியா திட்டத்தின் கீழ்:

1. இன்சிட்டு திட்டம் வாயிலாக ரூ 171.41 கோடி மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 25,472 அலகுகளில் 1,33,670 மேம்படுத்தப்பட்டது.

2. நூல் வங்கி திட்டம் வாயிலாக 8 நூல் வங்கிகளுக்கு வைப்பு நிதியாக ரூ.5.96 கோடி மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. பொது வசதி மையங்கள் (CFC) மூலம் 3 அலகுகளுக்கு மானிய நிதி ரூ 4. 94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4. குழு ஒர்க் ஷெட் திட்டம் (GWS) திட்டங்களுக்கு மானிய நிதியாக ரூ.0.83 கோடியும், கரூரில் 2 அலகுகளுக்கு டெக்ஸ் நிதித் திட்டம் வாயிலாக மானிய நிதி ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

SITP (ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களுக்கான திட்டம்) மூலம் பி. டெக்ஸ்டைல் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (டிசிடிஎஸ்): வாயிலாக மானிய நிதி 147.92 கோடி ஒதுக்கீடு செய்து 4 பூங்காக்கள் பூர்த்தி செய்யப்பட்டு 3 பூங்காக்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன (மொத்தம் 07 பூங்காக்கள்).

CPCDS மெகா கிளஸ்டர் (டெக்ஸ்வேலி)

விரிவான விசைத்தறி கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம் (CPCDS) வாயிலாக 40.05 கோடி மானிய நிதியுடன் ஈரோட்டில் பவர்லூம் மெகா கிளஸ்டர் வெற்றிகரமாக நிறைவடைந் துள்ளது.

திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்படுத்தல் நிதித் திட்டம் (ATUFS) மூலம் ரூ. 163.81 கோடி மானிய நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 446 விசைத் தறி அலகுகள் ATUFSன் கீழ் பயன் பெற்றுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



புதுச்சேரி காலாப்பட்டு தொகுதி அவசர செயற்குழுக் கூட்டம் மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் நடைபெற்றது. மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். தொகுதி செயலாளர் சத்தியவேலு வரவேற்று பேசினார். இதில், எஸ். கோபால், இரா. சக்திவேல், கோதண்டபாணி, இளம்பரிதி, நடராஜன், நாகலிங்கம், திருமால், ரவி, தாமோதரன், முருகன், சோமசுந்தரம், காத்தலிங்கம், நாராயணசாமி, பன்னீர்செல்வம், ராஜேந்திரன், ரவிக்குமார், ஹேமச்சந்திரன், மஸ்தான், கலைமணி, ஏழுமலை, ரவி, சந்திரன், சாந்தமூர்த்தி, தனுசு, விஷ்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. நாகன்

**பிப்ரவரி 5 (2024)**



**திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் தொடங்கியபோது அதில் தன்னை இணைத்துக் கொண்டு தனது பகுதி முழுவதும் கிராமம், கிராமமாக சென்று கழகம் வளர்த்தவர்.**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராக இருந்தவர்.**

**உத்திரமேரூர் வட்டச் செயலாளராக பணியாற்ற தொடங்கி, 1977 முதல் 2014 வரையிலான 37 ஆண்டுகள் தொடர்ந்து உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**உத்திரமேரூர் பேரூராட்சி கவுன்சிலர், பேரூராட்சி தலைவர், கூட்டுறவு சங்க இயக்குநர், தலைவர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்தமும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு 18 முறைக்கு மேல் சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சுற்றுச்சூழலைப் பாதுகாக்க

# கரிம எரிபொருட்கள் பயன்பாட்டினை குறைத்திட அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

## மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!



*புதுடெல்லி, பிப்.5 - மாநிலங்களவையில் மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் 2 ஜனவரி 2026 அன்று, சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், வருகின்ற 2047 ஆண்டிற்குள் கரிம எரி பொருள் பயன்பாட்டினை 35 சதவீதமாக குறைத்தி டவும், நீடித்த வளர்ச்சிக் கான குறியீடு இலக்குகளை அடைந்திடவும், நிலக்கரி சுரங்க நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் மாசுபாடு அதி கரிப்பதை குறைத்திடவும் ஒன்றிய அரசு ஏதேனும் முயற்சி களை எடுத்துள் ளதா? என்றும் அதன் விவ ரங்களை உறுப்பினர்க ளுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி அவர்களிடம் விரி வான கேள்வியை எழுப்பி னார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:*

*இந்திய அரசின் வளர்ச் சிக்கான திட்டங்கள், எரி சக்தி பாதுகாப்பு தேவை கள், பருவநிலை மாற்ற த்தை சரி செய்யும் நடவ டிக்கைகள் இவற்றிற்கிடை யில் சமநிலையை ஏற்படுத் தும வகையில், ஒன்றிய அரசு அனைத்து கொள்கை முடிவுகளையும் மேற் கொண்டு வருகின்றது என் றும், புதுப்பிக்கத்தக்க எரி சக்திகளான சூரிய மின் சக்தி, காற்றாலை சக்தி, நீர் மின்சக்தி, அனுமின் சக்தி ஆகியவற்றை பெருக்குவ தன் மூலம், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் அனல் மின் சக்தியின் தேவையை குறைத்துக் கொள்ள அரசு ஆவன செய்து வருகின்றது என்றும். கடந்த டிசம்பர் 2025 நிலவரப்படி நாட் டின் மொத்த மின்சக்தி தேவையில் 267 ஜிகா வாட் அளவிற்கு, அதாவது 52 சத வீத அளவிற்கு, புதுப்பிக்க த்தக்க எரிசக்திகளின் மூலம் நாடு பயன் பெற்று வரு கின்றது என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு நிலக் கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் மாநிலங்களவை யில் தெரிவித்தார்.*

*வருகின்ற 2047 ஆண் டிற்குள் 100 ஜிகா வாட் அளவிற்கு அனுமன் சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் கவனத்தின் உள் ளது என்றும் இதன் மூலம் சுற்றுச்சூழலட ஏற்படுத் தும் அனல் மின்சக்தியின் பயன்பாட்டினை தொடர்ந்து குறைத்திட தேவையான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகின்றது என்றும், ஒவ்வொரு ஆண் டும் 50 ஜிகா வாட் அள விற்கு புதுப்பிக்கதக்க எரி சக்தி திட்டங்களை நிறை வேற்ற அரசு உறுதி பூண் டுள்ளது என்றும், எரிசக்தி துறையில் முதலீடு செய்யப் படும் வெளிநாட்டு நேரடி மூதலீட்டி ற்கு 100 சதவீத அனுமதி வழங்கப்படுகிறது என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்ட ஒப்பந்தங்க ளுக்கு எரிசக்தி பாதுகாப்பு சட்டம் 2001 கீழ் பல்வேறு சலுகைளும், இணக்கமான கொள்கை முடிவுகளையும் ஒன்றிய அரசு எடுத்து வரு கிறது என்றும். ஒருமாநிலத் திலிருந்து மற்றொரு மாநி லத்திற்கு எடுத்து செல்லப் படும் புதுப்பிக்கத்தக்க எரி சக்திகளுக்கு பல்வேறு சலு கைளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் மாநிலங்களவை யில் தெரிவித்தார்.*

*மேலும் பிரதம மந்திரி கிஷான் உர்ஜா தி;ட்டம், பிரதம மந்திரி சூரிய ஒளி இலவசமின்திட்டம், தேசிய பசுமை ஹைட்ரஜன் திட் டம், சூரிய ஒளி காற்றாலை திட்டங்கள், சூரிய ஒளி பூங்கா திட்டம் என பல் வேறு திட்டங் களை ஒன் றிய அரசு நிறைவேற்றி வரு கிறது என்றும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 ன்படி அனைத்து நிலக்கரி சுரங்கங்கள் அனைத்தும். சுற்றுச்சூழல் அமைச்சகத் தின் தடையில்லா சான்றிதழ் களை பெறுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படியே சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு செய்யபட்டு வருகிறது என்றும்,*

*காற்று, தண்ணீர், நிலம் ஆகியவை பாதிக்கப்பட் டால் அதற்கான நிலக்கரி சுரங்கங்கள் பொறுப்பை ஏற்கும் வகையில் திட்ட செயலாக்கம் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது என் றும், மாநில மாசுக் கட்டுப் பாட்டு ஆணையமும், மத் திய மாசுக்கட்டுப்பாட்டு ஆணையமும் இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க வும், கரிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க வும் தேவையான அனைத்து முயற்சிகளை யும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி மாநிலங் களவையில், மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவ லிங்கம் எழுப்பிய கேள் விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.*



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,நகர செயலாளர் கார்த்திக்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பொற்செல்வி இளமுருகு

**பிப்ரவரி 5 (2013)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.**

**தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் “கலைஞர் விருதினை” அளித்து சிறப்பு செய்தார்.**

**“1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**